1972 மார்ச் 29]

கல்லாரிலுள்ள அரசுப் பழத் தோட்டம்

*788. வின . திரு. மே. சி. தூயமணி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி கல்லார் அரசினர் பழத் தோட்டதை விரிவுபடுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

(இ) ஆம் எனில், அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மன்னே ப. நாராயணசாமி :

(அ) இல்லே.

(இ) இக் கேள்விக்கு இடமில்லே.

திரு. மே. சி. தூயமணி : தலேவர் அவர்களே, மேட்டுப்பாளையம் தொகுதி கல்லார் அரசினர் பழத் தோட்டம் 90 ஆண்டுகளுக்கு முன்னுலே துவக்கப்பட்டது. பண்டித நேரு அவர்களால் பாராட்டப்பட்டது. அந்தத் தோட்டத்தை விரிவுபடுத்துவது நல்லது. அதற்கான செயற் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசிலனேயில் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மன்னே ப. நாராயணசாமி : தலேவர் அவர்களே, இப்பொழுது நடைபெற்று வருகின்ற நிலேமையில் மேலும் இதற்கான விருத்தி செய்கின்ற அளவில் அரசு இல்லே. பக்கத்தில் காடுகள் இருக்கின்ற காரணத்தால், இதை விரிவு செய்ய முடியுமா என்பதை ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிருர்கள்.

திரு. கு. அ. பொம்மன் : தலேவர் அவர்களே, கல்லார் பழத் தோட்டத்திலே கொக்கோ பயிரிடுவது என்கிற திட்டம் இருந்து, அதற் காக நிலம் ஒதுக்கப்பட்டிருந்தது. அந்தத் திட்டம் என்ன ஆனது ?

மாண்புமிகு திரு. மன்னே ப. நாராயணசாமி : தலேவர் அவர்களே, அதுபற்றி விவரம் இல்லே.

திரு. கோவை செழியன் : தலேவர் அவர்களே, கல்லார் பழத் தோட்டத் திலே பழ ஜாம்கள், பழச்சாறு, பழத்திலிருந்து கிடைக்கும் பொருள் களேச் செய்து பொது மக்களுக்கு விற்பனே செய்கிருர்கள். அதை நாமே நல்ல முறையில் தமிழகம் எங்கும் எல்லா மக்களுக்கும் கிடைக்கும் படிச் செய்ய அதை விருத்தி செய்ய அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. மன்னே ப. நாராயணசாமி : தலேவர் அவர்களே, அதற்கென சில முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. அதற்கு இருக்கின்ற பரப்பளவிலே இன்னும் நல்ல முறையிலே அதிகமான பழ மரங்களே உற்பத்தி செய்கின்ற முறையிலே முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. முடிந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறு வதுபோலப் பழப் பொருள்கள் நம்முடைய மாநிலம் எங்கும் உள்ள மக்களுக்குக் கிடைக்க முயற்சி எடுத்துக்கொள்ளலாம்.